செ.வெ.எண்: 724/2016 நாள்: 15.10.2016

# பத்திரிகைச் செய்தி

## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்
## வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை சேவை மையத்திற்கான செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மையை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை சேவை மையம் அமைக்கப்படும் என 07.08.2016 அன்று தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 - விதியின் கீழ் அறிவித்திருந்தார்கள். இத்திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயத்திற்குப் பயன்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை குறைந்த வாடகையில் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்வதும், விவசாயத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்வதும், புதிய வகை வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளிடம் பயன்பாட்டிற்கு கொண்டு வரச் செய்வதுமே இத்திட்டத்தின் நோக்கம்.

இத்திட்டத்தின் கீழ் உழுவை இயந்திரம், விசை உழுவை, நெல்நாற்று நடும் இயந்திரம், குழி தோண்டும் கருவி, சுழற்கலப்பை, விசைத்தெளிப்பான், பல்வகைப்பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற கருவிகளும் டிராக்டர் மற்றும் பவர் டில்லர் ஆகியவற்றால் இயக்கப்படும் இதர வேளாண் கருவிகளும் மானிய விலையில் விவசாயிகளுக்கு அல்லது விவசாயிகள் குழுவிற்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு அல்லது விவசாயிகள் குழுவிற்கு 40 சதவிகிதம் வரையும் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். ஒரு வாடகை சேவை மையத்திற்கு ரூ.25.00 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்குவதற்கு ரூ.10.00 இலட்சம் மானியம் வழங்கப்படும். விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கு வேளாண்மைப் பொறியியல் துறையால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து தங்களின் முழு விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்து மானிய உதவியுடன் வாங்கி, அனைத்து விவசாயிகளும் பயன் பெறும் வகையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை சேவை மையம் நடத்தி பயன்பெறலாம்.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் அல்லது விவசாயிகள் குழுக்கள் செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), நாகர்கோவில் அல்லது சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ), நாகர்கோவில் மற்றும் தக்கலை அலுவலகங்களில் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று, பூர்த்தி செய்து கிழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்விபரங்கள், வேளாண்மைப் பொறியியல் துறையின் முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் அனுமதிக்கடிதம் கிடைக்கப் பெற்றவுடன் தேர்வு செய்த வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் ஆகியவற்றிற்குரிய முழுத் தொகையையும்,

விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கேட்பு வரைவோலை மூலமாக வழங்க வேண்டும். வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் பெற்ற பின்னர், அதனை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் உறுதி செய்து, அதற்குரிய முழு மானியத் தொகையையும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்துவார்கள்.

விவசாயிகள் வேளாண் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க, இத்திட்டத்திற்கென கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மானிய விலையில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பெற விரும்பும் விவசாயிகள் அல்லது விவசாயிகள் குழுக்கள் வேளாணமைப் பொறியியல் துறையில் பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1. பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
2. ஆதார் அட்டையின் நகல்
3. குடும்ப அட்டை நகல்
4. சிட்டா அடங்கல் நகல்
5. புல வரைபடம்

விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்.

உதவி செயற்பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
833, தொழிற்பேட்டை, கோணம்,
நாகர்கோவில் - 629 004.
தொலைபேசி எண் . 04652___260681.

உதவி செயற்பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
22/31யு, மேட்டுக்கடை,
பள்ளிவாசல் சமீபம்,
தக்கலை ___ 629175.

இத்தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.